# உண்மையான இந்துமதம் ஈன்றெடுத்த தொழுகை முறைகள்

இந்து மதம் இம்மண்ணுலகில் தோன்றி அனாதிக் காலம் 4,85,920 + கிரேதாயுகம் 17,28,080 [பாட வேறுபாடு 17,28,000] + திரேதா யுகம் 12,90,000 [பாட வேறுபாடு 12,96,000] + துவாபர யுகம் 8,64,000 + கலியுகம் 5,085 = 43,73,085 நாற்பத்து மூன்று நூறாயிரத்து எழுபத்து மூவாயிரத்து எண்பத்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. இதற்கு முன் இந்த இந்து மதம் விண்வெளியிலுள்ள அண்டங்களில் கணக்கற்ற கோடியாண்டுகளாக இருந்து வருகிறது. பதினெண் சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புகளும்தான் தங்களுடைய விண்வெளி மதமான தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழியில் இம்மண்ணுலகுக்கு வழங்கினார்கள்.

இந்த இந்து மதம் மறைகள் நான்கு + முறைகள் நான்கு + நெறிகள் நான்கு + வேதங்கள் நான்கு என்று 16 வகையான செல்வ வளங்களையுடையது. இவற்றைத்தான் திருமணங்களில் கூறப்படும் "பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க!" என்ற சொற்றொடர் விளக்குகிறது.

***முறைகள் நான்கு***: 1. தொழுகை முறை, 2. அழுகை முறை, 3. எள்ளல் முறை, 4. ஏசல் முறை இப்படி இறைவனை வழிபடும் முறைகள் என்று இந்து மதம் அறிவிக்கும் நான்கு வகையான முறைகளிலும்; முதல் நிலையில் இருக்கின்ற முறைதான் தொழுகை முறை. ஆனால், இம்முறை இன்றைய இந்து மதத்தில் வழக்கில் இல்லை.

இந்து மதம் தனது நான்கு வகையான முறைகளில் முதல் முறையான தொழுகை முறையை ஏன் இழந்தது? எப்படி இழந்தது? எப்பொழுது இழந்தது? எதற்காக இழந்தது? எவரால் இழந்தது? எவ்வெவ்வாறு இழந்தது? ... என்ற வினாக்களுக்கு முறையான, முழுமையான, நிறைவான விடை கண்டு பிடிக்கப்பட்டால்தான் இந்து மதம் மறுமலர்ச்சி பெறும்; புதுவாழ்வு பெறும்; புரட்சிக்குரிய செழுச்சிகளைப் பெற்று, எழுச்சிமிகு கிளர்ச்சிகளை வளர்ச்சி பெறச் செய்யும் என்று முடிவு கட்டி விஞ்ஞானச் சூழல்களிலும் பகுத்தறிவுப் போக்குகளிலும் ஆக்கப் பூர்வமான நோக்கங்களிலும் ஆராய்ச்சிகளை நிகழ்த்தி வருபவரே இன்றைய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி ஆவார்கள். இவரது அரிய கூரிய சீரிய நேரிய பெரிய முயற்சிகளை வைத்துத்தான் இவரை இந்துமதத் தந்தை என்று உலக அருளாளர்கள் போற்றுகிறார்கள். இவர் நூலாகவும், கட்டுரையாகவும், அஞ்சலாகவும் எழுதிக் குவித்திருப்பவை அச்சேறிடத் தமிழ் இனமும், தமிழ் மொழியும், தமிழ் நாடும் விடுதலை பெற்றிடல் வேண்டும். அக்காலமும் இக்காலம் என்பதால்; தமிழ் உணர்வும் இனப் பற்றும், நாட்டு உரிமையுணர்வும் மிகுந்த தன்மானத் தமிழர்கள் இவரது ஆராய்ச்சிப் பணியில் பங்கு பெறட்டும் என்பதற்காகவே இச்சிறு கட்டுரை எழுதப்படுகின்றது. ஏனெனில், தனிமரம் தோப்பாகாது என்பதை உணர்ந்து இவர் பல நூறாயிரக் கணக்கான அருளாளர்களை உருவாக்கி வந்துள்ளார். அதைப்போல் ஆராய்ச்சி உலகில் பல ஆராய்ச்சியாளர்கள் தோன்ற வேண்டும் என்பது எங்களைப் போன்ற உண்மையான இந்து மத வாதிகளின் விருப்பம்.

*குறிப்பிலிருந்து சில:-*

"ஆலயம் தொழுவது சாலமும் நன்று" என்ற எளிய வழக்காற்றுக் கருத்துச் சொற்றொடர் மூலம் பதினெண் சித்தர்கள் ஆதியில் படைத்திட்ட 48 வகையான வழிபாட்டு நிலையங்களில் ஆலயம் என்ற ஒன்றில் தொழுகை முறை கையாளப்பட்டது என்ற பேருண்மை தெரிய வருகிறது.

'தருவாக்கு' என்னும் நூலில் இருந்து

1. அழுகை இழுகை உழுகை எழுகை
   தொழுகை விழுகை ஆறும்
2. ஆண்டவர் இறைவர் ஈசர் எல்லா
   கடவுள் தெய்வம் ஆறும்
3. முறை முறை உணர்த்திச்
   சித்தியெல்லாம் சடுதியில்
4. நிறை நிறை தந்தருளுமே

---என்று மிகத் தெளிவான குறிப்பு ஒன்று தொழுகை முறை பற்றிக் கூறுகின்றது.

இவையெல்லாம் கருவாக்கு, கருவாசகம், குருவாக்கு, குருவாசகம், தருவாசகம், திருவாக்கு, திருவாசகம், அருள்வாக்கு, அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாசகம், ... குருபாரம்பரியம் முதலிய பல நூல்களிலும் தொழுகை முறை பற்றிய குறிப்புக்கள் வந்திருக்கின்றன.

அக்குறிப்புச் சொற்றொடர்களில் சிலவற்றை அடிப்படையாகக் காட்டுகிறோம் இங்கு. இவற்றை அடிப்படையாகக் கொண்டு, தமிழின் வளர்ச்சிக்கும், கிளர்ச்சி மிகு விழிச்சிக்கும், செழுச்சிமிகு எழுச்சிக்கும் பாடுபடுபவர் பாடுபடலாம்.

தொழுகை முறைகள் ஆறு
தொழுகைக் காலம் ஆறு
தொழுகை நாயகங்கள் ஆறு
தொழுகை மறைகள் ஆறு
தொழுகை இடங்கள் ஆறு
தொழுகை நெறிகள் ஆறு
தொழுகை வேதங்கள் ஆறு
தொழுகைச் சித்தங்கள் ஆறு
தொழுகை ஓதங்கள் ஆறு
தொழுகை போதங்கள் ஆறு
தொழுகை மோதங்கள் ஆறு
தொழுகை தத்துக்கள் ஆறு
தொழுகைத் தத்துவங்கள் ஆறு
தொழுகை அத்துக்கள் ஆறு
தொழுகை எத்துக்கள் ஆறு
தொழுகை ஏந்துகள் ஆறு
தொழுகை உந்துகள் ஆறு
தொழுகை அத்திறங்கள் ஆறு
தொழுகைச் சாத்திறங்கள் ஆறு
தொழுகைச் சூத்திறங்கள் ஆறு
தொழுகைத் தோத்திறங்கள் ஆறு
தொழுகை நேத்திறங்கள் ஆறு
தொழுகை மீமாம்சைகள் ஆறு
தொழுகை ஆகமங்கள் ஆறு
தொழுகை ஆரணங்கள் ஆறு
தொழுகைப் பத்திகள் ஆறு
தொழுகைச் சத்திகள் ஆறு
தொழுகைச் சித்திகள் ஆறு

தொழுகை முத்திகள் ஆறு
தொழுகைப் பூசாறிகள் ஆறு
தொழுகைக் குருக்கள்கள் ஆறு
தொழுகைப் பண்டாரங்கள் ஆறு
தொழுகை ஓதுவார்கள் ஆறு
தொழுகை அருளாளிகள் ஆறு
தொழுகை மருளாளிகள் ஆறு
தொழுகையகச் சுத்திகள் ஆறு
தொழுகைப்புறச் சுத்திகள் ஆறு
தொழுகைப் பத்தர்கள் ஆறு
தொழுகைப் போத்தர்கள் ஆறு
தொழுகைப் புத்தர்கள் ஆறு
தொழுகை முத்தர்கள் ஆறு
தொழுகைச் சித்தியாளர்கள் ஆறு
தொழுகைத் தூதர்கள் ஆறு
தொழுகைக் கருவறை விதிகள் ஆறு
தொழுகை உருவறை விதிகள் ஆறு
தொழுகை வெருவறை விதிகள் ஆறு
தொழுகை மரபுகள் ஆறு
தொழுகை ஒழுகலாறுகள் ஆறு

இப்படிக்கு
குருதேவர் ஆசிரியர் குழு
இ.ம.இ.; க.வ.க.; அ.வி.தி.; உ.அ.தி.ச.; அ.ஆ.க.; அ.ம.ஆ.கு. -- முதலியன.

<u>ஆதாரம்</u>: தலைமைப் பொறுப்பாளர்
தலைமைப் பணியாளர்

---

1. இந்துமதம் வளர்ப்போம்! இந்தியாவைக் காப்போம்!
2. இந்துமதமே இந்தியர்களை ஒற்றுமைப் படுத்தும்!
3. இந்துமதமே மொழியுரிமை இன உரிமை வளர்க்கும்!
4. இந்துமத விழிச்சியே தனிமனித எழுச்சி! சமுதாயச் செழுச்சி!
5. இந்துமத விடுதலையே கெடுதளைகளைத் தடுக்கும்!
6. இந்துமத ஆட்சி கயவர் சூழ்ச்சிகளை வீழ்ச்சிபெறச் செய்யும்!
7. இந்துமத ஞானமே அனைத்து விஞ்ஞானங்களுக்கும் தாய்.
8. இந்துமதமே சமத்துவச் சமுதாயம் உருவாக்க முடியும்.

---

**அன்புள்ள சேவுக!**

".....நான் என்னுடைய ஏட்டறிவும், பட்டறிவும், பயிற்சியும், முயற்சியும், உழைப்பும், உயர்நோக்கமும், அக்கரையும், ஆர்வமும் உலகுக்குப் பயன்படாமல் போய்விடக் கூடாதே என்ற அச்சத்தால்தான் அச்சங்கள் கடந்து அயராது பாடுபட்டு வருகிறேன்.

நான் உலகுக்கு வழங்குபவை அனைத்தும் உலக முதலினமான தமிழினத்தவர் உருவாக்கிய அறிவுச் செல்வங்களே. இவை தமிழர் புகழ் பாடுபவை மட்டுமல்ல; மனித இனத்தின் நல்வாழ்வுக்கு வழியமைப்பவை.

இன்றுள்ள இலக்கியம், சமுதாயம், அரசியல் முதலிய பெரும்பாலான துறையின் பெரும்பாலானவர்கள் மக்களைச் சிந்திக்க விடாமல் திசை திருப்பிப் போலிகளாக, கூலிகளாக, காலிகளாக, எடுபிடிகளாக, அடிமைகளாக, கோழைகளாக, தன்னல வெறியர்களாக, ஊழல் பேர்வழிகளாக, ... உருவாக்கி வருகிறார்கள். இதனைத் தடுத்துத் திருத்தும் மாபெரும் பணியில் துணிவோடும் பணிவோடும் ஈடுபட்டிருப்பவனே நான்.

நான் எனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும், வசதியையும், பிறரின் ஏக்கங்களும், ஏமாற்றங்களும், தேக்கங்களும், விம்மல்களும், விசும்பல்களும், புலம்பல்களும், துடிதுடிப்புக்களும், இல்லாமைகளும், இயலாமைகளும், ... அகற்றப் படுவதற்காகவே பயன்படுத்துவேன். இது உறுதி, உண்மை, வாய்மை என்பதனை என்னை ஆளாக்கிய என் தந்தை, பேராசான், சிந்தனையாளன், ஆராய்ச்சியாளன், மிகப் பெரிய படிப்பாளி, பொதுவுடமைத் தத்துவத்தின் தன்னிகரற்ற தலைவன், அரசியல் மாமேதை, அறிவியல் வித்தகன், சமுதாயத் தத்துவஞானி சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமி முழுமையாக நம்பியது ஒன்றே எமக்குப் போதும்; பிறரை நம்பவைக்கும் முயற்சியில் ஈடுபடப் போவதில்லை நான்.

எனவே, நான் புகழுக்காகவோ! பொருளுக்காகவோ! பதவிக்காகவோ! ... நடிக்க வேண்டிய அவசியமே எனக்கு இல்லை. எனவேதான், நான் எனது ஒவ்வொரு நொடி வாழ்வையும் சான்றுகளும், ஊன்றுகளும், சாட்சிகளும் நிறைந்த வரலாறாக உருவாக்கி வருகிறேன்.

இந்த வரலாறு, 'மானுட நல உரிமை' என்றாவது எப்படியாவது செயலாகிட வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக அமைந்திடும். இதுவே, எனது தெளிவான முடிவான கருத்து!...."

ஓம் திருச்சிற்றம்பலம்! அன்பே சிவம்!

அன்பு
**இந்து மதத் தந்தை**
**குருமகா சன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

---

## கேள்வியும் நானே! ...... பதிலும் நானே!......

**1. பூஜை என்பதற்குரிய தமிழ்ச் சொல் என்ன! விளக்கம் என்ன!**

'பூ' வினால் இறை [48 வகை] வழிபாடு செய்யப்படுவதே 'பூசை' என்று தமிழில் குறிக்கப் படுகின்றது. இதனைத்தான் 'பூஜை' என்று வடமொழியில் குறிக்கின்றனர்.

**2. சக்தி என்று குறிக்கப்பட்டு வரும் சொல்லை சத்தி என்றே குறிக்க வேண்டும், ஏன்?**

சத்தி என்ற சொல் சக்தி என்று தவறாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. தமிழ்மொழி வழக்கப்படி 'க்' என்ற எழுத்துக்குப் பிறகு 'கி' அடியொற்றி வர வேண்டும். சக்கி என்றுரைத்தல் இவ்விடத்தில் பொருளற்றது. எனவே, சத்தி என்றே குறிக்க வேண்டும். இதே போல் பத்தி (பக்தி), சத்தி (சக்தி), சித்தி, முத்தி (முக்தி) என்றே பதினென்சித்தர்கள் தங்கள் நூல்களில் பயன்படுத்தியுள்ளனர்.

**3. அனைத்துக்கும் பொதுவாக 'மந்திரம்' என்று இடையின 'ர' குறித்து எழுதி வருவது சரியா? விளக்கம் தேவை.**

பதினெண் சித்தர்கள் மந்திறம், மந்திரம், மந்தரம், மாந்தரம், மாந்தரீகம் என்று ஐந்தைக் குறிக்கின்றார்கள். ஆனால் காலப்போக்கில் 'மந்திரம்' என்ற சொல் மட்டுமே மக்களுக்குத் தவறாக அறிமுகப்படுத்தப்பட்டு விட்டதால் இந்த ஐந்தையும் அறிய முடியாமல் போய்விட்டது. எனவே, மக்களின் சிந்தனையைத் தூண்டத்தான் மந்திரம் என்ற சொல் தற்போது கையாளப் படுகின்றது.

வழக்கில் உள்ள திருமந்திரம் என்ற நூலுக்கு அது மனதைத் திறமைப்படுத்துவதற்காகப் பயன்படக் கூடிய ஒன்று (மனது + திறம் = மந்திறம்) என்று குறிக்கப் பட்டு 'திருமந்திறம்' என்றே சித்தர்கள் பயன் படுத்தியுள்ளனர். இதைப் பன்முறை வற்புறுத்தியும் பலர் இடையின் 'ர' உபயோகப்படுத்தி வருகின்றனர். அவர்கள் திருந்த வேண்டும்.

**4. துறவி நிலை இந்து சமயத்திற்கு உரிய ஒன்றா?**

துறவி நிலை இந்து சமயத்திற்குரிய ஒன்றல்ல. இந்து சமயத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர்கள் யாரும் துறவியாக இருக்கவில்லை. அவர்கள் படைத்த கடவுள்கள் (48 வகையினர்) யாரும் துறவிகளாக இல்லை. இந்து மதத்துக்குரிய தலைவர்களை 'விந்து வழி வாரிசு', 'குருவழி வாரிசு' என்று பிரிக்கின்ற காரணத்தினால் திருமணம் செய்து கொண்டு வாழ்வது இன்றியமையாதது. இல்லறமே நல்லறம் என்று பதினெண் சித்தர்களால் வலியுறுத்தப்படுகின்றது. மேலும் துறவு நிலை என்பது நாட்டில் வாழும் மனிதர்களுக்கு உரிய ஒன்றல்ல.

'பெண்ணை, மண்ணை, பொன்னை வெறுப்பது மாபாவம்' என்று குருபாரம்பரியம் குறிக்கின்றது. பெண்ணை வெறுத்தலும், காவி கட்டுதலும் இந்து மதத்திற்கு உரிய ஒன்றல்ல, அப்படி வெறுத்து வாழ்பவர்கள் மதத் தலைவர்களாக இருப்பதற்கோ, அருள்வழங்குவதற்கோ தகுதியற்றவர்கள். காட்டில் வாழும் கொடிய விலங்குகளோடு வாழவே தகுதியானவர்கள்.

தமிழில் துறவி மட்டுமின்றி 'அறவி', 'ஆறவி', 'இறவி', 'உறவி', 'மறவி', ...

என்று பல்வேறு நிலைகளும் குறிக்கப் படுகின்றன.

**5. இந்து என்ற சொல்லுக்கு தற்போது பல்வேறு பொருள் தரப்படுகின்றதே, எது உண்மை? 'இந்து' என்பது தமிழ்ச் சொல்லா?**

'இந்து' என்ற சொல்லுக்குப் பின்னால் தோன்றியவர்களே பாரசீகர்களும், ஆரியர்களும்,...... பிறரும்.

அதாவது, இம்மண்ணுலகில் பயிரினங்களும் உயிரினங்களும் தோன்றிய காலத்திற்குப் பிறகு மனித இனம் தோன்றி விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த காலத்தில் மண்ணின் ஈசர்களான மணிதர்களால் (மனிதர்களால்) அருளுலக நலங்களைத் துய்ப்பதற்காக அனாதி காலக் கருவூரார் இந்து மதத்தை மணீசர்களுக்கு வழங்கினார். அப்பொழுது அவர் இந்து என்ற சொல்லுக்கு 48 பொருள்கள் கூறியதாக குருபாரம்பரியத்தில் தெளிவாகக் குறிக்கப்படுகின்றது. இந்து = விந்து, உயிரணு, உயிரின் ஆரம்பமும் முடிவும், .....

**6. பிராமணன் - என்ற சொல்லைப் பயன்படுத்துவது சரியா? அது தமிழ்ச் சொல்லா?**

பிரமன் - படைப்புக்குரிய கடவுள் என்று குறிப்பது தவறு. பிரமன் - என்ற சொல்லே தமிழில் இல்லை. பதினெண் சித்தர்கள் பிற + மண் = பிறமண் = இம்மண்ணுலகில் பிறப்புக்குக் காரணமான கடவுள் என்பதாகும்.

பிராமணர்கள் என்று வழக்காற்றில் உள்ள சொல்லைப் பிற + மண்ணினர் = பிறமணர் = அயல் நாட்டவர் = அன்னியர் என்று குருபாரம்பரியத்தில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. பிராமணர் என்று தவறாகக் குறிப்பதோடு மட்டுமல்லாது பிரமனின் வாரிசுகள் என்று தங்களைக் குறித்துக் கொள்வது மிகவும் கேலிக்குரிய ஒன்றாகும்.

**7. சம்பிரதாயம் - என்ற சொல்லுக்கு எழுதப்பட்டு வரும் 'ர' கரம் சரியா?**

சம்பிரதாயம் என்று குறிக்கப் படுவது தவறு. வல்லின 'ற' கரத்தை உபயோகிக்க வேண்டும்.

சம்பிறதாயம் = சம்பு + பிறம் + தாயம் = சம்புத் தீவில் [குமரிக்கண்டம் = இளமுறியாக் கண்டம் (The Lost Lemuria Continent)] பிறந்து, தொடர்ந்து தாய் (தாயம்) வழியாக வாழ்ந்து வரும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள்.

எனவே இடையின 'ர' பயன்படுத்துவது பொருளற்றது.

**8. பெரியவாள் - என்று நமது மதத்துறையில் ஒரு சொல் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. அதற்கு பொருள் விளக்கம் என்ன?**

குரு பாரம்பரியத்தில், இந்து மதத்தைக் காப்பதற்காக பதினெட்டு ஊர்களில் பெரியவாள், அரியவாள், சீரியவாள், கூரியவாள் (நேரியவாள்) ........ என்று மடாதிபதிகள் உருவாக்கப்பட்டதாக செய்திகள் உள்ளன. இதேபோல் காமகோடி, ஏமகோடி, சோமகோடி, வாமகோடி ... என்று 18 ஊர்களிலும் பீடாதிபதிகள் உருவாக்கப் பட்டிருந்ததாகச் செய்திகள் இருக்கின்றன. காலப் போக்கில் இப்பீடாதிபதிகளில் பெரும்பாலானவர்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டனர். இவர்களையெல்லாம் சித்தர் நெறியின் மூலம்தான் மீண்டும் உருவாக்கிச் சமயத்திற்குப்

புத்துயிர்ப்பு ஊட்ட முடியும்.

**9. ஆச்சாரியார் என்ற பட்டம் இருக்கிறதே, அது தமிழுக்கு உரியதா?**

குரு பாரம்பரியத்தில் பரமாச்சாரியார், பிறம்மாச்சாரியார், திருமாலாச்சாரியார், இந்திராச்சாரியார், எமனுச்சாரியார், இறையாச்சாரியார், கடவுளாச்சாரியார், தெய்வீகாச்சாரியார்,..... என்று எண்ணற்ற ஆச்சாரியார்கள் குறிக்கப் படுகின்றனர். இவர்களைப் பற்றிய முழு விளக்கங்கள் பூசாவிதிகள், குருமார் ஒழுகலாறு (குருமார் ஒழுக்கம் என்ற பாடவேறுபாடு உள்ளது) என்ற இரண்டு நூல்களில் நிறைய உள்ளன. அதாவது கோயிலில் பூசை செய்பவர்களுக்கே இந்தப் பட்டம் (ஆச்சாரியார்) வழங்கப் பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

---

**இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின்**
**சமய - சமுதாய - கலை - இலக்கிய விழா**

12-6-84 **அன்று**
**வைகாசி பால்குடப் பெருவிழா**

**இடம்** : சித்தர் மாநகர், காரியேந்தல்பட்டி, மதுரை - 625503
**நாள்** : 12 - 6 - 1984 செவ்வாய்க் கிழமை
**நேரம்** : மாலை 4.00 மணி

இது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டச் சாதனை விழா!

இது சித்தர் நெறித் தத்துவங்கள் பயன்படுகிறது என்பதைக் கண்கூடாகக் காணச் செய்யும் விழா!

எனவே, அனைத்து அருளாளர்களும், அருளுலக, அறிவுலக வாரிசுகளும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்க வாரீர்.

அனைவரும் ஒன்று கூடுவோம்! இந்து எழுச்சிக்குப் பாடுபடுவோம்.

---

## வணக்கவுரை

இந்து மறுமலர்ச்சி இயக்கம் பொதுமக்களிடம் செயலாற்றப் புறப்பட்டு அரும் பெரும் சாதனைகள் பல சாதித்துள்ளது, சாதித்து வருகின்றது. அதில் 'குருதேவர்' அறிக்கை ஒரு மாபெரும் முயற்சியே! இம்மாபெரும் முயற்சிக்கு நம்மிடையே நம்பிக்கையும், பற்றும் பாசமும் கொண்டவர்கள்தான் முதுகெலும்பாக நின்று உறுதுணையாக இருந்து வருகின்றனர். இக் 'குருதேவர்' அறிக்கை மேலும் அழகுடன் மலர்ந்து புதுப்பொலிவுடன் பட்டி தொட்டிகளிலெல்லாம், மூலை முடுக்குகளிலெல்லாம் மணம் வீசிட அரிய பெரிய முயற்சிகள் எடுத்து வருகின்றோம்.

இக்'குருதேவர்' அறிக்கையின் மூலம் நாம் பல அரிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளோம். முதலாவதாகப் பதினெண்சித்தர்கள் மனித குலத்திற்குப் படைத்திட்ட அரிய பெரிய கருவூலங்களான எண்ணற்ற நூல்களின் பெயர்களை வெளியிட்டோம். பின்னர் 'தமிழினத் தந்தை', 'வெண்தாடி வேந்தர்', 'பகுத்தறிவுப் பகலவன்', 'சிந்தனைச் சிற்பி', 'தமிழ்ச்சமுதாய சீர்திருத்த மாமேதை' பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் தன்னலமில்லாது தமிழின விழிச்சிக்கு ஆற்றிட்ட அரும்பெரும் செயல்களை விளக்கியும் ஒப்பிட்டும் வெளியிட்டோம்.

இன்றைய நிலையில் நமது மக்கள் பெரும்பாலும் கேட்பவை பொதுவாக கடவுளைக் கும்பிட என்ன மந்திரம் சொல்ல வேண்டும்? என்பதே! அதற்காகவே மிக எளிய முறையில் சித்தர்களால் உருவாக்கப்பட்ட 'அருட்சினை மந்திர'த்தை இரண்டாவது இதழில் வெளியிட்டோம். இ.ம.இ.யின் மாபெரும் மக்கள் சேவையான அ.வி.தி.யைப் பற்றி செயல் விளக்கம் தந்தோம்.

பின்னர்தான் 'தங்களுக்கு மட்டுமே சொந்தம்; சமசுக்கிருதத்தில்தான் உண்டு' என்று இறுமாந்திருந்தவர்களுக்குப் பேரிடியாக 'இந்து மதத் தந்தை' குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் பதினெண் சித்தர்கள் பயன்படுத்தி வந்த காயந்திரி மந்தரத்தை உலக அருளாளர்களின் ஒப்புதலோடு வெளியிட்டார். இதனால் எதிர் கொண்டு வந்த விளைவுகள் பல என்றாலும் இவ்வியக்கம் எதையும் ஏற்றுச் சமாளிக்கும் தீரமிக்கது; திறமிக்கது; வீரமிக்கது என்பதால் மேலும் துணிந்து 'மறைமலையடிகளின் கருத்தி'னையும் தொகுத்து வெளியிட்டோம்.

படித்தவர்கள் இவ்வறிக்கையை மேலும் தொடர்ந்து படித்திடவும், படித்தவர்கள் மற்றவர்களையும் வாங்கிப் படிக்கச் செய்யவும் தூண்ட வேண்டும். ஏனெனில், இவ்விதழ் மற்றைய செய்தியேடுகள் போலப் படித்தவுடன் மறந்து விடும் உணர்வை வரவழைப்பது அல்ல; படிப்பதோடு மட்டுமல்லாமல் தொடர்ந்து பாதுகாத்திடவும்; பரம்பரை முழுக்க தொகுத்துப் படிக்கும் வாய்ப்பினை நல்கிடவும் உதவும் சிறப்புப் பெற்ற இதழ் இது. எனவேதான், ஒவ்வொரு மனிதனும் (தமிழினம்) தனக்கென வாங்கிப் பாதுகாத்துக் கொள்ளும்படி வேண்டுகின்றோம். இன்னும் இந்து மதத்தைப் பற்றிய மிக மிக அரிய பெரிய வரலாறுகளும், தத்துவங்களும், இரகசியங்களும், உரிமைகளும் இவ்வறிக்கை மூலம் தொடர்ந்து வெளிவர உள்ளன.
ஆதரவுகள் தொடர்வதற்கு நன்றிகள் பலப் பல!

அன்பு
தலைமைப் பொறுப்பாளர்
பிறம்மாச்சாரியார் சி. கவிக்குமார்